


# தமிழ்ச்சிட்டு



## உயர்வே கருதுக!

எண்ணிப் பேசுக! பேசிச் செய்க!
ஏற்றம் கருதி வாழ்ந்திடுக!
மண்ணின் உயிர்களை மதித்துப் போற்றுக!
மக்களுக் கென்றும் நலம் புரிக!
உண்ணல் சிறிதே ஆயினும் உன்றன்
உடல்நலம் கருதி உண்டிடுக!
கண்ணுள் ஒளியெனத் தாய்மொழி காக்க!
கடமை, ஒழுங்கைக் கைக்கொள்க!



தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

குரல்: 2. இசை: 7.

15 காசு



# உங்கள் மடல்கள்

O சிறுவர்களுக்கெனத் தனித்தமிழில் வெளிவரும் தமிழ்ச்சிட்டு தனித்தமிழ்ப் பற்றையும், நாட்டுப்பற்றையும் இளைஞர்களுக்கு ஊட்டி, அவர்கள் விளங்கிக் கொள்ளும்படி கதை, கட்டுரை, பாடல்கள் முதலியவற்றை வெளியிட்டுத் தொண்டாற்றி வருவதை அறியாதவரும் பாராட்டாதவரும் உண்டோ? நாம் உயிர் வாழக் காற்று எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறு சிறுவர்களின் நல்லறிவு வளர்ச்சிக்குத் தமிழ்ச்சிட்டு இன்றியமையாததாகும்.

–வெ. வீரகிருட்டிணன், மலாகா, மலேசியா.

O தாங்கள் தனித்தமிழ் சிறுவர் கலையிதழாகிய தமிழ்ச்சிட்டைச் சிறுவர்கள் மட்டுமன்றிப் பெரியோர்களும் உணர்ந்து பாராட்டும் வகையில் உருவாக்கி வெளியிட்டு வருகின்றீர்கள் மிக்க மகிழ்ச்சி.

இவ் வருந்தொண்டால் உணர்ச்சியும், உள்ளத்துடிப்பும், ஆர்வமும் மிக்க சிறுவர்களுக்கு இளமையிலேயே தமிழின்பால் தாளாப் பற்றும், தணியாவேட்கையும் ஏற்படச் செய்ய முடிகின்றது. இவ்வண்ணம் தம் இளம்பருவத்தே தனித்தமிழைப் பயின்று உணர்வெய்தும் இளைஞர்கள் நாளை, தம் எழில்மிகு, வளங்குன்றாத் தமிழன்னைக்கு எக்குறை ஏற்படினும் மனம் பொறுப்பாரோ? எனவே இது குறித்துத் தங்கள் பெருந்தொண்டை உளமாரப் பாராட்டவும் நன்றி சொல்லவும் கடமைபட்டவனாகின்றேன்.

-கே. குமரன், மஞ்சவாடி, விக்கிரம பாண்டியம் (அஞ்)

O எங்களைப் போன்ற சிறுவர்கள் பிழையில்லாமல் பேசவும், எழுதவும் தெரிந்து கொள்ளத் தக்க செய்திகளை எளிய நடையில்-தமிழ்ச்சிட்டின்வழி வெளியிட்டு அறிவூட்டிவரும் உங்களுக்கு என்றும் என் நன்றி உரியது.

-அண. வள்ளியப்பன், காரைக்குடி, முகவை (மா. வ)

O முதியவர்களிடமுள்ள முரண்களைத் திருத்த முயல்வது ''களையுநர் கைகொல்லும்'' என்பது போன்றது. ஆனால் தமிழ்க் குழந்தைகளின் உள்ளத்தில், சார்பால் ஓரளவு முரண் புகுந்திருப்பினும் அதனை நீக்கல் ''இளைதாக முள்மரம் கொல்வது'' போன்றது...சிறுவர்களுக்கு 'வானக்கப்பல்' போன்ற இலக்கியத்திறன் நிறைந்த உயிர்த்துடிப்புள்ள பாடல்களை எழுதுவது மேல்.

–சி. சத்தியமூர்த்தி, இலங்கை



# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-2 | தி. பி. ௧௯௯௯ கும்பம்(மாசி) மார்ச்சு–68 | இசை-7

# உங்களுக்குப் பேசத் தெரியுமா? –2

குழந்தைகளே! சென்ற இதழில் பேச்சுத் திறமையைப் பற்றிச் சிறிது பேசினோம். அதுபற்றியே இந்த இதழில் இன்னும் சிறிது பேசுவோம்.

நாம் ஒரு பையனைக் கடைக்கு அனுப்பிக் "கத்தரிக்காய் விற்கிறதா; பார்த்துவா"–என்று கூறுகிறோம். அவன் உடனே போய் வந்து, "இல்லை" என்று சொல்லுகின்றான். அவனை "அப்படியானால் முருங்கக்காய் விற்கிறதா?" என்று கேட்கின்றோம். அவன், "நான் அதைப் பார்க்கவில்லையே" என்று விடை கூறுகின்றான். நாம் அவன் கெட்டிக்காரன் இல்லை என்று முடிவுகட்டி விடுகின்றோம். ஏன்? அவன் கத்தரிக்காயைத் தேடுகின்ற பொழுதே முருங்கைக்காயோ பிற காய்களோ அவன் கண்களில் படலாம் இல்லையா? அவ்வாறு அவன் கண்களில் பட்ட காய்கறிகளை அவன் மூளையில் பதிய வைத்துக் கொள்ள வில்லை. அதனால்தான் அவனுக்குக் கத்தரிக்காயைத்தவிர வேறொன்றும் தெரியவில்லை.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

அவனை அவ்வாறு கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே அவன் மாமன் அங்கு வந்து! "என்னடா, வென்றி! காய்கறிக்கடையில் உன்னைப் பார்த்தேன்; பலமுறை 'வென்றி, வென்றி' என்று கூப்பிட்டேன்; திரும்பிப் பாராமல் வந்து விட்டாயே!" என்கிறார். அவனைப் பற்றி இன்னும் என்ன நினைப்போம். காய்கறிக்கடையில் உள்ள பொழுது அவன் கண்களும் சரியாக வேலைசெய்ய வில்லை; காதுகளும் சரியாக வேலைசெய்ய வில்லை, என்றுதானே நினைப்போம். அதனால்தானே வென்றியின மூளையில் செய்திகளே நிறையப் பதியவில்லை! தம்பி, நம் மூளைதான் நமக்குப் பணப்பெட்டி; கருவூலம். அந்தப் பெட்டியில் நம் முன் எதிர்ப்படும் செல்வங்களையெல்லாம் வாரிப்போட நமக்கு ஐந்து வேலைக்காரர்கள். அவர்கள்தாம் கண், மூக்கு, காது' வாய், மெய்! இவர்கள் வாரி வாரி மூளைப்பெட்டியில் போட்டால்தான் மூளை நிறையும். மூளை நிறைந்தால்தான் அதில் உள்ள செல்வங்களை நாமும் பயன்படுத்த முடியும்; பிறர்க்கும் கொடுக்க முடியும். வெறும் காலிப் பெட்டியாக இருந்தால், நம் தேவைக்கும் பயன்படாது; பிறர் தேவைக்கும் கொடுக்க முடியாது. இனி, காலிப் பெட்டியாகஇருக்கக்கூடாதே என்பதற்காக, கல், மண், செத்தை, சருகு இவற்றையெல்லாம் வாரிப்போட்டு நிரப்புவோமா? அதுவும் கூடாது. தேவையான விலை மதிப்பற்ற காட்சிகளையோ, கருத்துகளையோதாம் நம் மூளைப்பெட்டியில் போட்டு நிரப்பலாம். அவைதாம் நமக்கு உதவும். நமக்கு எதிர்ப்படும் செய்திகள், கருத்துகள் சில காசுகள் போன்றவை; சில உருபாக்கள் போன்றவை; இன்னும் சில பொன் போன்றவை; அவற்றில் மிகச் சிலவோ விலைமதிப்பற்ற முத்து, பவழம், காழம் (வைரம்), மாணிக்கம் போன்றவை உருபாக்கள் மிக மிகக் காசுகளை அகற்றி விடவேண்டும். பொன் மிக மிக உருபாக்களை அகற்றிவிட வேண்டும். மணிகள் மிகமிக, பொன்னையும் அப்புறப் படுத்திவிட வேண்டும். இந்த வகையில் நம் மூளைப்பெட்டியை நாம் பாதுகாத்து வந்தால், நாம் அறிவுச் செலவம் படைத்தவர்கள் ஆவோம் இல்லையா?

தம்பிகளே! தேடிய அறிவுச் செல்வத்தை நாமே வைத்துக்கொள்ளாமல் அவற்றைத் தேவையான பிறருக்கும் கொடுக்க வேண்டும். நல்ல முத்துபோன்ற கருத்துகள் இருக்க, காசுகளை மட்டும் கொடுக்கக்கூடாது. நாம் இப்படிக் கொடுக்கும் அளவுக்கு வளர வேண்டுமானால், நாம் எவ்வளவு மிகுதியாகச் சேர்க்கவேண்டும் தெரியுமா? இப்படிச் சேர்க்காதவன் மூளை வறுமை உள்ளவன்; அறிவு ஏழை. அவனால் நன்றாகப் பேசமுடியாது. பேசினாலும் கல், மண், சருகுபோல் அவற்



# குட்டிக்கதை

-அரி. இல. தமிழடியான்-

பிறந்து சில திங்களே ஆன ‘பிச்சி’’என்ற மீன் தன் சின்னஞ் சிறு உடலை வளைத்து, நெளித்து நீரில் வளைய வளைய வந்து கொண்டிருந்தது அடிக்கடி நீரின் மேற்பரப்பில் வந்து வந்து வெளியுலகைக் கண்டு மகிழ்வதும், பின் உள் சென்று உலவுவதும் அதற்கு விருப்பமாய்த் தோன்றியது. ஆதலால், நீரினுள் நீந்துவதும், பிறகு மேற்பரப்பிற்கு வந்து புறவுலகைக் கண்டு மகிழ்ச்சியால் துள்ளுவதும் இவ்வாறாக வேளைமறந்து, வேலை மறந்து தன் போக்கில் விளையாடிக் கொண்டிருந்தது. அதற்குத் துணையாகச் சில “அயிரை” களும் சேர்ந்து விடவே அதன் ஆட்டம் முன்னிலும் பன்மடங்காய் மிகுந்து கொண்டே போயிற்று!

அதுபோழ்து, அவ்வழி வந்த அறிவிலும், அகவையிலும் மூத்ததான ‘ஆரா’ மீன் தாத்தா அதனை அன்புடன் விளித்து, அப்பா! பிச்சி! நீ அறியாப் பிள்ளை! ஆதலால்தான் இவ்வாறு

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

றால் யாருக்கும் பயன் விளையாது. அவனால் இவ்வுலகில் எந்த வினையையும் நன்றாகச் செய்ய முடியாது. அவன் நிலத்துக்குக் கனம். மக்களுள் பதர்; காய்க்காத மரம்; நடைப்பிணம். இருந்தும் ஒன்றுதான்; இறந்தும் ஒன்றுதான். அவனால் அவனுக்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை.

எனவே’ குழந்தைகளே! மூளைப் பெட்டியைச் சுறுசுறுப்புடன் அறிவுச் செல்வத்தைத் தேடி இப்பொழுதிலிருந்தே நிரப்பிக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் சிறந்த பேச்சாளராக முடியும்; எழுத்தாளராக முடியும்; பாவலராக முடியும்; எடிசனாக முடியும்; ஐன்சுடீன் ஆக முடியும், இல்லையானால் நீங்கள் ஒரு கல்; மரம்; கழுதை; குதிரையாகத்தான் இருப்பீர்கள்!

-பெருஞ்சித்திரன்

அச்சமின்றி நீரின் மேற்பரப்பில்சென்று நின்று இல்லாத ஆட்டமெல்லாம் போடுகின்ருய்; நான் சொல்வதைக்கேள்! நமக்கென்றே இறைவனுல் படைக்கப்பட்ட எதிரிகளான "கொக்கனும்", "மீன்கொத்தி" யானும் கண்டுவிட்டால் உயிருக்கே உலை வைத்தால் போல்தான்! தெரிகிறதா? என்ன? எனவே இதுபோல் மேற்பரப்பில் நின்றுகொண்டு விளையாடாதே! உடனே உள்ளே போய்விடு!'' என்று கூறியது. அதைக்கேட்ட 'அயிரை'களெல்லாம் அக்கூற்றை 'ஆரா' சொன்னமுறையிலேயே ஏற்றி இரக்கிக் குரல்மாற்றி ஏளனம் செய்யத் தொடங்கிவிட்டன! சிறிதே மனம் மாறியிருந்த பிச்சியும் அவற்றுடனேயே சேர்ந்துகொண்டு தானும் அதனை எள்ளி நகையாடத் தொடங்கிவிட்டது. "சும்மா வாயை மென்று கொண்டிருந்தவனுக்கு அவல் கிடைத்தால் எப்படியோ அதுபோலத் தம்போக்கில் விளையாடிக்கொண்டிருந்த அவ்விளம் மீன்கூட்டத்திற்கு 'ஆரா' மீன் தாத்தா அகப்பட்டுக் கொண்டதும் அதையே கருவாக வைத்து முன்னிலும் பன்மடங்காய் ஆடிப்பாடத் தொடங்கிவிட்டன! ஆயின்- இவற்றையெல்லாம் கண்டுகொண்டிருந்த 'ஆரா'வோ சரி, சரி! அவரவர் போக்குப்படியாகட்டும்! "இளங்கன்றுகள் அச்சமறியா"- 'பட்டால் தான் தெரியும் செட்டியார் பாடு" என்று எண்ணியவாறே இடத்தைவிட்டு அகன்றது.

அந்த நேரம் பார்த்து எங்கிருந்தோ ஒரு "மீன்கொத்தி'! அங்கு விரைந்து வருவதைப் பட்டறிவால் உணர்ந்த 'ஆரா' மீன் தாத்தா உடனே நீருக்குள் ஓடி ஒளிந்தது! ஆனுல், அறியாத அவ்விளம் மீன்களின் கூட்டத்தின் முன்னே தலைமை வகுத்து நின்ற 'பிச்சி'யோ அம் மீன்கொத்தியின் கூரிய அலகிற்குள் அகப்பட்டுக் கொண்டது ஏனைய மீன்களெல்லாம் ஓடி ஒளிந்திட அலகின் நடுவே அகப்பட்ட 'பிச்சி'யோ அப்பொழுதான் 'ஆரா' மீன் தாத்தா சொன்ன அறிவுரையை எண்ணத் தொடங்கியது! ஆனுல், நிலைமை மிஞ்சிப்போன பிறகு என்ன செய்ய முடியும்? மூத்தோர் சொல் கேளாததனுல் மூண்ட வினையை எண்ணியவாறே அஃது இரங்கத்தக்க நிலையில் கொஞ்சம், கொஞ்சமாய்த் தன் உயிரை விட்டுக் கொண்டிருந்தது!

"மூத்தோர் சொல் கேள்!"




-புலவர். தி. நா. அறிவுஒளி-

25. அவ்வகை, இவ்வகை, எவ்வகை எனும் சொற்களின் முன் வலிமிகும்.

அவ்வகை + திறன் = அவ்வகைத்திறன்
இவ்வகை + செய்யுள் = இவ்வகைச் செய்யுள்.
எவ்வகை + பூ = எவ்வகைப்பூ.

26. 'பனை' என்ற பெயரை யடுத்து வலிமிகும். (ந. நூ. 203)

பனை–கொடி = பனைக்கொடி.

27. ஓரெழுத்தொரு மொழியின் முன்வலி மிகும்.

ஈ + கால் = ஈக்கால், பூ + பறி = பூப்பறி, நொ + பெரிது = நொப்பெரிது.

28. யகர, ரகர, ழகர (ய்,ர்,ழ்) எனும் மெய்யிறுதிச் சொற்களின் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் வலிமிகும்.

யாழ் + பாணன் = யாழ்ப்பாணன், நார் + பட்டு = நார்ப்பட்டு.
தேர் + கால் = தேர்க்கால், தேர் + தட்டு = தேர்த்தட்டு,

29. யகர, ரகர, ழகர (ய்,ர்:ழ்) என்னும் மெய்யீற்றுச்சொற்கள் அல்வழிப் புணர்ச்சியில் பண்புத்தொகை, உவமைத் தொகைகளில் வலிமிகும்.

யாழ் + கருவி = யாழ்க்கருவி. (பண்புத் தொகை)
கார + பருவம் = கார்ப்பருவம் ,,
மெய்-கீர்த்தி·மெய்க்கீர்த்தி ,,
வேய்-தோள்-வேய்த்தோள் (உவமைத் தொகை)
வீழ்-கூந்தல்-வீழ்க்கூந்தல் ,, (வீழ்-விழுது. விழுது போன்ற கூந்தல் என்பது பொருள்)
கார்-குழல்-கார்க்குழல்,

30. பண்புத் தொகையில் வலிமிகும்.

தீமை-குணம்-தீமைக்குணம், வெள்ளை-சட்டை-வெள்ளைச்சட்டை.
பச்சை-தமிழர்-பச்சைத் தமிழர், புது-பானை-புதுப்பானை,
மாசி-திங்கள்-மாசித்திங்கள்,

31. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லெழுத்து மிகும்.

சாரை-பாம்பு-சாரைப்பாம்பு, மார்கழி-திங்கள்-மார்கழித்திங்கள்.
வேழம்-கரும்பு-வேழக்கரும்பு, பருத்தி-செடி-பருத்திச்செடி.

32. உவமைத் தொகையில் வல்லெழுத்து மிகும்.

தாமரை-கை-தாமரைக்கை, பணை(மூங்கில்)-தோள்-பணைத்தோள்
காவி-கண்-காவிக்கண், பனை-கை-பனைக்கை.

33. வேற்றுமைத் தொகையில் வலிமிகும்.

விள-கோடு-விளக்கோடு, பலா-பழம்-பலாப்பழம்
கிளி-சிறகு-கிளிச்சிறகு, தீ-கடுமை-தீக்கடுமை.

34. அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் க ச த ப மிகும்.

கிளி-கூண்டு-கிளிக்கூண்டு, புலி-குகை புலிக்குகை.
கடு-காய்-கடுக்காய், பூ-பை-பூப்பை, யானை-கால்-யானைக்கால்.

35. அஃறிணைப் பெயர்முன் அல்வழிப் புணர்ச்சியில் க ச த ப மிகும்.

விள-சிறிது-விளச்சிறிது, வட்ட-பலகை-வட்டப்பலகை
வேழம்-பூ-வேழப்பூ, தீ-பெட்டி-தீப்பெட்டி,
கொசு-பெரிது-கொசுப்பெரிது,
பூ-சிறிது-பூச்சிறிது,

36. உயிரீற்றுச் சொற்களின் முன்வலி மிகும்.

ஆடி-காற்று-ஆடிக்காற்று, குடி-தனம்-குடித்தனம்.
மலை-பிஞ்சு-மலைப்பிஞ்சு, தீ-சார்பு-தீச்சார்பு.

37. தெரிநிலை வினையெச்சத்தின் முன் வல்லெழுத்து மிகும்.

ஆட-சென்றான்-ஆடச்சென்றான், ஆடா-செல்-ஆடாச்செல்,
ஆடி-பெறு-ஆடிப்பெறு, உண்மையாக-பேசு-உண்மையாகப் பேசு.

துண்ணென-பேசேல்-துண்ணெனப் பேசேல்.
உண்பாக்கு-கொடுத்தான்-உண்பாக்குக் கொடுத்தான்.
பார்த்து-சிரித்தாள்-பார்த்துச் சிரித்தாள்.

38. இகர வீற்று வினை யெச்சங்களின் முன் கசதப மிகும்.

கூடி-பாடினான்-கூடிப்பாடினான், ஓடி-தொட்டாள்-ஓடித்தொட்டாள்.
அருளி-செய்-அருளிச்செய், விரும்பி-படி-விரும்பிப்படி,

39. ஆ, ஊ ய், கு ஆகிய விகுதிகளையுடைய வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகும்.

கல்லா-(கல்-ஆ)-களிப்பர்-கல்லாக்களிப்பர்,
உண்ணூ (உண்-ஊ)-பருத்தான்-உண்ணூப்பருத்தான்.
போய்-கண்டாள்-போய்க்கண்டாள், வருவதாய்-சொல்-வருவதாய்ச்சொல்.
நல்லதாய்-கொடு-நல்லதாய்க்கொடு, விரைவாய்-செல்-விரைவாய்ச் செல்.
காண்பதற்கு-போனான்-காண்பதற்குப் போனான். (காண்-ப்-அ-து-அன்-கு

40. நிகழ்கால வினையெச்சங்களுக்கு(செயவெனெச்சம்) முன் வலி மிகும்.

செய்ய-சொல்-செய்யச்சொல், வர-போகிறாயா-வரப்போகிறாயா?
இருக்க-கூடாதா-இருக்கக்கூடாதா?

41. குறிப்பு வினையெச்சத்தின் முன் (அன்றி, இன்றி) வலிமிகும்

அன்பின்றி-சென்றாள்-அன்பின்றிச்சென்றாள்.
அதுவன்றி-கொடேல்-அதுவன்றிக்கொடேல்.
மனமின்றி-சொல்லார்-மனமின்றிச் சொல்லார்.
பொருளின்றி-தாரார்-பொருளின்றித்தாரார்.

42. அகரயீற்றுக்குறிப்பு வினையெச்சத்திற்கு முன் வல்லினம் மிகும்.

பைய-சென்றாள்-பையச்சென்றாள், மெல்ல-பேசு-மெல்லப்பேசு.
சால-தந்தான்-சாலத்தந்தான்.

43. 'செய்யா' யென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுக்கு முன் 'க,ச,த,ப' மிகும்-

பெய்யா-கொடுக்கும்-பெய்யாக்கொடுக்கும்.
புரண்டுவீழா-பெருநிலத்தில்-புரண்டுவீழாப்பெருநிலத்தில்.
கேளா-கொடுத்தான்-கேளாக்கொடுத்தான்.

44. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வலிமிகும்.

உண்ணு-பெரியார்-உண்ணுப்பெரியார் (உண்ணுத என்ற சொல்லின் ஈறு(த)கெட்டது)
நில்லா-செல்வம்-நில்லாச்செல்வம். (த)
தீரா-துயர்-தீராத்துயர், மூவா-தமிழ்-மூவாத்தமிழ்.
ஓடா-கலம்-ஓடாக்கலம், எழுதா-கிளவி-எழுதாக்கிளவி.
வடியா-கிளவி-வடியாக்கிளவி, விளங்கா-கேள்வி-விளங்காக் கேள்வி.
பறவா-குளவி-பறவாக்குளவி. அடங்கா-சினம்- அடங்காச்சினம்
அறியா-குழந்தை-அறியாக்குழந்தை.

விரிவாக விளக்கப் பெற்ற இவற்றை நினைவிருத்திப் பிழையகற்றி எழுதுக!

---

# போருக்காக இந்த உலகம் செலவிட்ட தொகை.

பல்லாயிரம் ஆண்டுகளாக உலக வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கும் போரில், ஏறத்தாழ 5000 ஆண்டுகளில், ஏறத்தாழ 400 கோடி மக்களுக்குமேல் இறந்திருக்கின்றனர் என்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். அப் போர்களுக்காகச் செலவிடப் பெற்ற தொகையைப் பொன்னாக மாற்றினால் ஏறத்தாழ 40,000 (கிலோ மீட்டர்) சுற்றளவுள்ள இவ்வுலகின் நடுக்கோட்டின் மேல் 9 மீட்டர் கனமும் 8 கிலோமீட்டர் அகலமும் உள்ள பொன்தகடாகப் பதிக்கலாம் என்றும் அவர்கள் கணக்கிட்டுக் கூறுகின்றனர்.

(ப. செயராமன், தஞ்சை-1)



# பெரியோர் கதை!

## காரல் மார்க்சு

-பாவை. நடவரசன்-

தமிழ்ச்சிட்டுகளே!

குருதியையும் கண்ணீரையும் குழைத்து எழுதவேண்டியதொரு பெரியாரின் வாழ்க்கையை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அந்தப் பெரியவரைப் பலர், அறிவாளி என்றனர்; சிலர், அறிவிலி என்றனர். ஆனல், அவர் புதுநெறி காட்டிய பெரும் புலவர்; பொதுவுடைமையை உருவாக்கித் தந்த பேரறிஞர்; உழைத்து, உருக்குலைந்து நின்ற உழைப்பாளிகளை உயர்த்திய 'மீமிசை மாந்தர்'. அவர் தாம் காரல் மார்க்சு.

மார்க்சு, 1818-ஆம் ஆண்டு மேத் திங்கள் ஐந்தாம் பக்கலில் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் துடுக்குப் பிள்ளையாகத் துள்ளித் திரிந்தார். எந்தப் பிள்ளையும் இந்தப் பிள்ளையைக் கண்டுவிட்டால் கால் நடுங்க, கை நடுங்கத் தாம் போவார்கள். அப்படிப்பட்ட அந்தப் பிள்ளை, உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து இலத்தீன், செர்மன், கிரீசு, பிரெஞ்சு முதலிய மொழிகளைத் தெளிவுறக் கற்ருர்; தேர்வினில் வெற்றியும் பெற்ருர். பின்னர் மாணவப் பருவத்தில் கல்லூரியில் சேர்ந்து சட்டம், குமுகாயவியல், நிலவியல், மெய்யறிவு-முதலியவற்றைப் பாடங்களாக எடுத்துக் கொண்டு நன்கு படித்தார். அவர் தந்தையோ, சட்டத்தை மட்டும் ஊன்றிப் படிக்க வேண்டுமெனத் தூண்டிக் கொண்டே இருந்தார். ஆனல், அவருக்கோ ஆற்று மணற்கேணியில் தோண்டத் தோண்ட நீரூற்றுப் பொங்குதல் போல் அகத்தில் ஆயிரக்கணக்கான மெய்யறிவு எண்ணங்கள் பொங்கி வந்தன. அதில் அவர் மூழ்க, மூழ்கப் படிப்பினில் அக்கரை குறைந்தது. ஆயினும் பாடத்தில் வெற்றிப் பெற்றுப் பட்டத்தைத் தாம் பெற்ருர். அவர் எழு

திய கட்டுரைகளுக்காக அவருக்குப் பண்டாரகர் பட்டத்தைப் பல்கலைக் கழகம் வழங்கிற்று. அந்தப் பட்டத்தை அவர் என்றும் பயன் படுத்தியதே இல்லை.

மார்க்சு, கல்லூரியில் கற்கின்ற காலத்தே சென்னியைக் காதலித்து வந்தார். சென்னி அம்மையாரும் அவருக்காகவே வேறொருவரையும் திருமணம் செய்யாமல் காத்திருந்தார்; அந்தக் காலத்தை எதிர்நோக்கிப் பார்த்திருந்தார். ஒருமனமாகிய இவர்கள் திருமணம் செய்துகொண்டு, வாழ்க்கை நடத்தப் பாரிசு நகரில் குடியேறினர்கள் அங்குப் புதியதாகத் தொடங்கிய தாளிகைக்கு ஆசிரியராக அமர்ந்தார். அதன் முதல் இதழும் வெளிவந்தது. அதுவே முடிவு இதழாகவும் நின்றுபோய் விட்டது. அதனைத் தொடங்கியவர் மார்க்சுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் இன்றி, நூறு தாளிகைகளை மட்டும் எடுத்துக் கொடுத்து அதனை விற்றுத் தொகையை எடுத்துக் கொள்ளும்படி கூறிவிட்டார். அவர் என்ன செய்வார்? உறவினர்களோ, உற்றநண்பர்களோ இல்லாத அந்தப் பாரிசு நகரிலே துணைவியோடு தவியாய்த் தவித்தார். பல தொல்லைகளோடு இல்லறத்தை நடத்தலானுர்!

படித்த பெருமக்களில் பலர், நிகரமைக் கொள்கையைப் பரப்புவதற்காகத் தாளிகை ஒன்று நடத்தி வந்தார்கள். அதற்கு மார்க்சும் கட்டுரைகள் பல அனுப்பி வந்தார். அவை அனைத்தும் அன்றைய செருமானிய வல்லாண்மை (சர்வாதிகார)க் கோட்டைக்குச் சாவுமணி அடிப்பனவாய் இருந்தன; கடவுளின் படியாளர் (பிரதிநிதி) எனக் கருதிவந்த மன்னர் பிரெடெரிக் வில்லியத்தைக் கடை மாந்தனெனக் கூறின; வளமிழந்தும்-நலமிழந்தும் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிப் புரட்சிக்கு உயிரூட்டின; ஆண்டிருந்த அரசு, அத்தாளிகையைக் கண்ணுற்றுக் குமுகாயத்தின் அமைதியைக் குலைக்கின்றதென அதனைக் குலைத்தது. மார்க்சையும் நாட்டை விட்டு உச மணிக்குள் வெளியேற வேண்டுமென ஆணை கொடுத்து விரட்டியது. அவரும் தம் மனைவியொடு பிருசலை (BRUSSELS) நோக்கி நடந்தார்.

பிருசலுக்கு வந்ததும் அங்குக் குடியிருக்க ஒப்பங் கொடுக்க வேண்டுமென அவ்வரசுக்கு ஒரு விண்ணப்பங் கொடுத்தார். அவ்வரசும், "நீங்கள் எவ்வகையான கட்டுரைகளோ, தாளிகைகளோ வெளியிட வில்லை என்றால் இங்கே குடியிருக்கலாம்" என விடை அனுப்பி

யது. கையிருந்தும் முடவனாக, வாயிருந்தும் ஊமையனாக இருக்க வேண்டிய நிலையை எண்ணி வருந்தினார். இப்படி, அவர் செல்லும் இடமெல்லாம் செருமானிய அரசும் சென்று அவரை வாழவிடாமல் துரத்தியது; தொல்லை பல கொடுத்தது. அதனைத் தாளமுடியாத மார்க்சு மனமுடைந்து போனார். அதனால், தான் பிறந்த நாட்டின் பிறப்புரிமையைத் துறந்தார். அவர் நண்பர் ஏங்கல்சும் ௧௮௪௫-ஆம் ஆண்டு பிருசெல்லுக்கு வந்து சேர்ந்தார். மார்க்சும் ஏங்கல்சும் அன்றைய அரசியல் பொருளியல் நிலைமைகளை ஆய்ந்து, பொதுவுடைமை அறிக்கையை (Communist Mani festo) வெளியிட்டுக் கொள்கையைப் பரப்பினார்கள். கழகங்கள் வளர்ந்தன; மக்களும் ஆர்த்தெழுந்தனர். அவை அன்றைய அரசினையே நிலைகுலையச் செய்தன. காவலர்கள் பொதுவுடைமைக் கழகத்துள் ஒருநாள் திடுமென நுழைந்தார்கள். பலர்ஓடி மறைந்து தப்பினார்கள். மார்க்சு ஓடாமல் நின்று குற்றவாளியாகிச் சிறைக்குச் சென்றார். அந்த அரசும் அவர்மேல் குற்றஞ்சாட்டி, ௨௪ மணிக்குள் நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமென ஆணை கொடுக்கவே காவலர்களும் அவரை நகரின் எல்லைப்புறத்தில் கொண்டுவந்து விட்டுச் சென்றார்கள்.

மீண்டும் பாரிசுக்குச் சென்று, புதிய இரைன்லாந்து செய்தித் திரட்டு' என்ற தாளிகையைத் தொடங்கினார். அதன் ஆசிரிய உரையில்-கட்டுரையில் வல்லாண்மையைக் கண்டித்தார்; கொடுமையைத் தாக்கினார்; படை மறவர்களின் திருவிளையாடல்களைப் பக்கம் பக்கமாக எழுதி அம்பலப் படுத்தினார்; புள்ளிவிளக்கங்களோடும் பொருத்தமான சான்றுகளோடும் உணர்ச்சியூட்டுங் கட்டுரைகளை எழுதினார்; படித்த மக்கள் துடித்தார்கள். தூய அரசு வேண்டுமென மடிகட்டி எழுந்தார்கள். அதனைப் பொறுக்கமுடியாத அரசு, மார்க்சைச் சிறைப்பிடித்தது. ஆனால் தொழிலாளர்களும் பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் கூடி வந்து' ''மார்க்சை விடுதலைசெய்! மார்க்சை விடுதலைசெய்!!' எனக் கூக்குரல் கொடுத்தார்கள். அவர்களைக் காவலர்கள் நன்றாக அடித்துத் துரத்தியும் அவர்கள் கலையவில்லை; கூக்குரலினையும் நிறுத்தவில்லை. மார்க்சே வெளிவந்து, "கலைந்து போங்கள்" என்று கேட்டுக் கொண்ட பின்னர்தான் கூட்டம் கலைந்தது. 'மாந்தரிடம் மார்க்சுக்கு இவ்வளவு மதிப்பா?' என வெகுண்ட அரசு, அவரையும் அவர்தம் தாளிகையையும் தடுத்து நிறுத்திட எண்ணியது. அதற்காக அவரை நாடு கடத்தியது. அப்படி அவர் நாட்டைவிட்டு வெளியே போகும்

பொழுது அவர் நடத்தி வந்த இதழினைச் சிவப்பு மையால் அடித்து, ''தொழிலாளர்களே! பொதுமக்களே! உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறோம். ஆனால் கடைசி முறையாக அன்று.... '' என்ற சொற்றொடருடன் வெளியிட்டார். வாங்கிப் படித்த பலர் கண்ணீர் வடித்தார்கள். சிலர் கண்ணாடிச்சட்டம் போட்டு வைத்தார்கள். இன்றும் அதனைப் போற்றி வருகிறார்கள்.

அங்கிருந்து இலண்டன் (LONDON) மாநகருக்கு வந்து சேர்ந்தார். இலண்டனில், ''ஒவ்வொருநாளும் மனைவி மக்களை உயிரோடு வைத்திருக்க உணவு வாங்கப் பணமின்றித் தவித்தார். அதற்காகத் தன் மேல் சட்டையை ஒருநாள் ஈடு (அடமானம்) வைத்தார்; மற்றொருநாள் குழந்தையின் காலணியை வைத்தார்; வேறொருநாள் படுக்கைகளையே விற்றார். இப்படிப் பல பொருள்களை விற்றுங்கூட அவர்கள் அனைவருக்கும் வயிறார உணவு கிடைக்காமல் வாடிக்கிடந்த நாட்கள் பல. குழந்தை ஒன்று மார்பு நோயால் உயிரோடு போராடிக் கொண்டு திணறியது. ஐயகோ! மருந்துவாங்கிக் கொடுக்கப் பணமின்மையால் அக்குழந்தை துடியாய்த் துடித்து இறந்தது. அதனை நினைத்துத் தாய்-சென்னி, ''இந்தக் குழந்தை பிறந்தபோது தொட்டிலில்லை. இறந்தபோது பிணப்பெட்டி இல்லை'' எனச்சொல்லி அழுதிருக்கிறார். நெஞ்சினைப் பிய்த்தெறியுங் கொடிய துயரங்களையும் துன்பங்களையும் அப்படியே தாங்கிக் கொண்ட தாய், அவர். மார்க்சு செல்லும் இடமெல்லாம் தாமும் சென்று, அவரைக் காத்து வந்த தெய்வம் அவர். அவர் கடைசி மூச்சினை விடும் பொழுதுங்கூட 'காரல்' எனக் கணவர் தம் பெயரினைப் பலுக்கியே உயிர்விட்டிருக்கிறார்.

## இலக்கியமும் இறுதிநாளும்:

மனைவிக்கு அடுத்தபடி நண்பனே ஒரு மாந்தனுக்கு நல்ல துணையாகும். மார்க்சுக்கு அப்படி நல்ல நண்பராக ஏங்கல்சு கிடைத்தார். அவர்கள் உள்ள உணர்வால்–கொண்ட கொள்கையால்–ஆற்றும் பணியால் இரு கண்மணிபோல் இருந்தார்கள். அவர்தம் நட்பும் வளர்பிறைபோல் வளர்ந்தது. அதனால்தான் இருவரும் சேர்ந்தே புரட்சிகரமான உலகக் கண்ணோட்டத்துடன் பாட்டாளி மக்களின் வாழ்வியலை வடித்தெடுத்துப் புதியகுடும்பம் எனும் நூலாகத் தந்தார்கள். எதிர்காலப் பொதுவுடைமைக் குமுகாயத்தின் உருவத்தைக் காட்ட செர்மன்

கோட்பாடு எழுதிக் கொடுத்தார்கள். பொதுவுடைமையின் திறவு கோலாய்ப் "பொதுவுடைமைக் கட்சியின் அறிக்கை" யை வெளியிட்டார்கள். 'முதற் பொருள்' முழுவதையும் எழுத முடியாமல் மார்க்சு மறைந்தபோது, அதனைத் தொடர்ந்து எழுதி முடித்தவர், ஏங்கல்சு. மார்க்சு துன்புற்றபோதும், நாடுவிட்டு நாடு ஓடிய போதும், வறுமையால் வாடியபோதும் பெருந்துணையாக இருந்தவர், ஏங்கல்சு. பொதுவுடைமை வளர்ச்சிக்கு—தொழிலாளர் புரட்சிக்கு அவரோடு தோள் கொடுத்தவர், ஏங்கல்சு. அவர்தம் நட்பு, நல்லநூல் நயமாய்—நட்பிற்கொரு வடிவமாய் இன்னும் இருந்து வருகிறது.

மனைவிக்கும் நண்பனுக்கும் அடுத்தபடியாக ஒருவனுக்கு நூற்களே நல்ல துணையாகும்; நாளும் வழிகாட்டும் ஒளி விளக்காகும். இதனை உணர்ந்த மார்க்சு, இரவு பகலாகப் படித்தார். பசிக்கு உணவில்லை என்றாலும் படிக்க நூலிருக்கிறதே என்று படித்தார். சேக்சுபியர், தாந்தே கேத்தே ஆகியவர்களின் நூற்களை அப்படியே கரைத்துக் குடித்தார்.

வரலாற்றை-மெய்ப்பொருளை ஊன்றிப் படித்தார். சிறந்த பாக்களையும்-சிறுகதைகளையும்-பொருள்மிக்க புதினங்களையும் விடாமல் படித்தார். அப்படிப் படித்த நல்ல நூற்களை ஆண்டுக்கு ஒரு முறை மீண்டும் படித்து நினைவு படுத்திக் கொள்வார். அவர் ஆழ்ந்து படித்து, கூர்ந்து நோக்காத துறையே இல்லை. அரசியலா? அறிவியலா? அழகுக் கலையா? ஆண்டவன் சமயமா? அத்தனைத் துறைகளையும் ஊடுருவி நோக்கி உண்மையைக் கண்டவர் அவர். அதனால்தான், அறிவியலை வரலாற்று அடிப்படையில்-உயிர்நிறைந்த புரட்சிகரமான ஆற்றலென அவர் உரைக்க முடிந்தது. அவர் எழுதிய முதற் பொருளையும் அவர்தம் கொள்கையையும் அறிவியல் அடிப்படையில் அமைக்க முடிந்தது.

௧௮௮௩-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பதினான்காம் பக்கல் இரண்டே முக்கால் மணிக்கு நமது காலத்தில் தோன்றிய தலைசிறந்த எண்ணுதிறலார் தாம் எண்ணுவதை நிறுத்திக் கொண்டார். "இரண்டே இரண்டு நிமையங்கள்தாம் நாங்கள் அவரைப் பிரிந்திருந்தோம். இரண்டு நிமையங்களுக்குப் பிறகு, நாங்கள் அவரைத் திரும்பிச்சென்று பார்த்த பொழுது, அவர் சாய்வு நாற்காலியில் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ஆம்,மீள முடியாத பெருந் தூக்கத்தில் இருந்தார்"—இப்படி அவரைக் கல்லறையில் அடக்கஞ் செய்த

பொழுது, ஏங்கல்சு சொற்பொழிவாற்றினர்; கேட்ட ஆயிரக்கணக்கான மக்கள் அழுதனர்; கோடிக்கணக்கான தொழிலாளர்கள் கலங்கினர்.

மாந்தனின் வளவாழ்விற்கு வழி ஒன்று கண்டுபிடித்து, அதனை அமைப்பதற்கே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட மார்க்சை நினைவு கூறுங்கள். அவரைப் போல ஒவ்வொரு மாந்தனும் வாழ உறுதி கொள்ள வேண்டும். O

# 'ஒலம்பிக்கு' விளையாட்டு

- 'ஒலம்பிக்கு' எனும் விளையாட்டு பழைய கிரேக்க நாட்டில் கி. மு. 1200-க்கு முன் தொடக்கப் பெற்றதாகும். கி. மு. 787-ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற ஒலிம்பிக்கு விளையாட்டுகளின் பதிவேடுகள் காணக் கிடைக்கின்றனவாம்.
- 'ஒலிம்பிக்கு' ஆட்டம் ஏறக்குறைய 3000 ஆண்டுகளில் 309 முறைகள் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.
- பழைய ஒலிம்பிக்கு மறவர்களான 'மிலோ' என்ற மல்லரும் 'தெகினசு' என்ற குத்துச் சண்டை மறவரும் தலைக்கு ஒவ்வொரு சமைத்த மாட்டை உட்கார்ந்த அளவில் ஒரே முறையில் உண்டு முடிப்பாராம்.
- இரு பெரும் உலகப் போர்களும் 'ஒலிம்பிக்கு' விளையாட்டுக்கும் அதன் உணர்ச்சிக்கும் தடை ஏற்படுத்தவில்லை என்றாலும், 1916, 1940, 1944 ஆம் ஆண்டுகளின் ஆட்டங்களை நிறுத்திவைக்கப் போர்கள் காரணமாக இருந்தனவாம்.
- ஒலிம்பிக்கு விளையாட்டிற்குத் தனிக்கொடி ஒன்று உண்டு. இது தூய வெண்ணிறத்தால் ஆகியது. அதில் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய ஐந்து வண்ண வளையங்களும், உலகின் ஐந்து கண்டங்களுக்கும் உரியனவாக விளங்குகின்றன.
- 'ஒலிம்பிக்கு' ஆட்டம் தொடங்கும் ஒவ்வொரு முறையும் ஒலிம்பிய மலையின் மீதுள்ள புனிதமான ஓர் இடத்தில், சூரிய ஒளியிலிருந்து உண்டாக்கப்பட்ட புனிதமான தீப்பந்தம் ஒன்றை ஆள் மாற்றி ஆள் ஒலிம்பிக்கு ஆட்டம் உலகின் எந்தப் பக்கத்தில் நடந்தாலும் அங்கு எடுத்துக்கொண்டு ஓடுவார்கள். கடல் குறுக்கிடும் இடங்களில் மட்டும் கப்பலில் செல்வார்கள்.

(தொகுப்பு: ப. செயராமன், தஞ்சை-1.)

# தெரிந்து கொள்ளுங்கள்

- உலகிலேயே மிகச் சிறிய பறவை 'ஊங்காராப் பறவை'' (HUMMING BIRD). எடை 31 தவச எடை. நீளம் 2 விரற்கடை. இப்பறவைகளில் 750 வகைகள் உள்ளனவாம்.
- 'பெர்ச்' 'குராமி' என்ற இரண்டுவகை மீன்கள் கூடுகட்டி வாழ்கின்றன.
- மணிக்கு 320 கல் விரைவில் பயணம் செய்தால், நாம் கதிரவனை அடைய 53 ஆண்டுகள் ஆகும்.
- கதிரவனின் குறுக்களவு 8,65,000 கற்கள். கதிரவனுக்குள் நாம் வாழும் உலகத்தைப்போல் பதின்மூன்று இலக்கம் உலகங்களை அடக்கலாம். கதிரவனின் எடை நம் உலகின் எடையைப்போல் 3,34,434 மடங்காகும்.
- ஒலியின் விரைவு, ஒளியின் விரைவில் 9 இலக்கத்தில் ஒரு பங்காகும். ஒளியின் விரைவு ஒரு நொடிக்கு 1,86,000 கற்கள்.
- அமெரிக்காவில் இராக்கி மலைத்தொடருக்கு அருகில் 'உப்புப் பாலை நிலம்' ஒன்று உள்ளது. அந்நிலத்தை உழுது உப்பு எடுக்கின்றனர்.
- உலகிலேயே மிகப்பெரிய புத்தகக் கடை இலண்டனில் இருக்கின்றது. 40 இலக்கம் புத்தகங்கள் அதில் விற்பனைக்கு உள்ளன. அக்கடையிலிருக்கும் புத்தகப் பேழைகளை வரிசையாக அடுக்கினால் 30 கல் நீளம் வரும்.
- நம் நாட்டில் ஏறத்தாழ 2,18,000 பேர்கள் மது அருந்த ''இசைவுச் சீட்டு''(PERMIT)வைத்துள்ளனர்.
- உலகின் மிகப்பழைய புத்தகம் 5,400 ஆண்டுகளுக்கு முற்பட்டது. எகிப்தில் தேப்சு ஆற்றங்கரையில் அதன் படி (COPY) ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. அப் படி 4,400 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அந்தப் புத்தகத்தை எழுதியவர் எகிப்தில் கி. மு. 3500-இல் ஆளுநராக இருந்த 'டாசோடேப்' என்பவர்.
- நம் நாட்டில் சென்ற ஆண்டு மட்டும் 130 கோடி உருபா மதிப்புள்ள வெண்சுருட்டுகள் (சிகரெட்டுகள்)புகைக்கப்பட்டனவாம்.

(தொகுப்பு: இரா. வ. சனார்த்தனம், பள்ளிநேலியனூர்)




சென்றமாதப் புதிரின் விடை. புதிர்-1.

வாணிகர் மூவரும் கீழ்க்காணும் வகையில் தூவல்களைப் பகிர்ந்து கொள்வர்:—

முதல்வரும், இரண்டாமவரும் தலைக்கு

| | தூவல்கள் | ஒன்றின் விலை | மொத்தவிலை |
|---|---|---|---|
| | 10 | $\frac{1}{2}$ உருபா. | உருபா 5. |
| | 2 | $1\frac{1}{2}$ உருபா. | உருபா 3. |
| | 8 | 4 உருபா. | உருபா 32. |
| மொத்தம் | 20 | | உருபா 40. |

மூன்றுமவர் மட்டும்.

| | | | |
|---|---|---|---|
| | 4 | 4 உருபா. | உருபா 16. |
| | 16 | $1\frac{1}{2}$ உருபா. | உருபா 24. |
| மொத்தம் | 20 | | உருபா 40. |

புதிர் 2. $$\frac{999+999}{999} = 1000$$

இம்மாதப் புதிர்:—

மாசாத்துவான் என்ற வணிகர் மாநாய்க்கர் என்பவருக்கு ஒரு கல்லெடை (TON) இரும்பும், ஒரு கல்லெடை மரமும் துலையில் நிறுத்து விற்றார். மாசாத்துவான் மாநாய்க்கரை விளித்து, உண்மையில் ஒரு கல்லெடை இரும்பு நிறை மிகுந்ததா அன்றி ஒரு கல்லெடை மரம் நிறை மிகுந்ததா என வினவினார். அறிவிற் சிறந்த மாநாய்க்கர் உடனே விடை கூறாமல், அடுத்த மாதம் வருங்கால் விடையும் விளக்கமும் கூறுவதாகச் சொன்னார். விடை உங்களுக்குத் தெரியுமா? இல்லையெனில் மாநாய்க்கரின் விளக்கத்தை அடுத்த மாதம் கேளுங்கள்.

இப் புதிரை எழுதியவர்:—

இல. க. சுபாசு. கொத்தங்குளம் சிற்றூர்,
வைத்தியலிங்கபுரம் கிளை அஞ்சல், வழி திருவில்லிப்புத்தூர்.




O முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழை இதுவரை தமிழ்ச்சிட்டில் வெளியிடாமல் இருப்பது எங்களுக்கு ஒரு பெருங்குறையாக உள்ளது. எனவே அருள்கூர்ந்து அப்பகுதி ஒன்றை விரைவில் தொடங்குமாறு உங்களை வேண்டுகின்றேன்.

-கதிரொளி பரிவில்லிக்கோட்டை, கோவில்பட்டி.

O தமிழ்ச்சிட்டினால் பல்துறை அறிவையும் பெற்று வருகின்றோம். இருப்பினும் வள்ளுவரின் திருக்குறளில் ஒன்றெடுத்து அதற்கேற்ப ஒரு சிறு கதையைக் கண்டால் இனி என்ன தேவை எங்கட்கு?

-அ. க. அன்பழகன், அரூர், தருமபுரி.

O ஐயா, கண்ணகியின் வரலாறாகிய சிலப்பதிகாரத்தை எங்களுக்கேற்பச் சுருக்கி வெளியிடுமாறு வேண்டுகின்றேன். அப்படி வெளியிட்டால் மிகவும் நன்மை பயக்கும் என்று கருதுகின்றேன்.

-நா. கணேசன், சரசுவதி உயர்தொடக்கப்பள்ளி, அமரன்பதி.

O எம்மைப் போன்றே எம் பள்ளி மாணவர்களையும் தனித்தமிழ்ப் பண்பும் பற்றும் ஆர்வமும் உடையோராய் ஆக்கிவிடவும், தமிழ்ப் பெருங்குடியாக விளங்கச் செய்யவும் விழைகின்றேன். எனவே எம் மாணவர்களையும் 'தமிழ்ச்சிட்டு' பெற்றுப் படித்துப் பயன்பெறத் திங்கள்தோறும் தமிழ்ச்சிட்டுகளை எமக்கு அனுப்பிவைக்க வேண்டுகின்றேன்.

–மு. கிருட்டிணசாமி, ஆசிரியர் அரசு, உயர்பள்ளி.
த. பொட்டக்கொல்லை, தத்தனூர் (அ) உடையார்பாளையம் வழி.

தண்கடல்சூழ் உலக மெங்கும்
தண்ணொளியால் ஒளிரச் செய்யும்
வெண்மதிபோல் சிறுவர் எல்லாம்
மேன்மையுறுங் கருத்தைச் சேர்த்துக்
கொண்டுவரும் 'தமிழின் சிட்டே'
கொல்களிற்றை யடக்கி மாய்க்கும்
திண்மைமிக்க தமிழர் நெஞ்சத்
தேரினிலே திகழ்வாய், வாழ்வாய்.

–வீ. வில்வநாதன், தொலைபேசித் தொழிலகம், பெங்களூர்-16.

# திருக்குறள் அறிவு!

கற்க! கற்க! கற்க!
கற்பன வற்றைக் கற்றவை வழியில்
நிற்க! நிற்க! நிற்க!

சொல்க! சொல்க! சொல்க!
சொல்லுஞ் சொல்லால் மற்றவர் சொல்லை
வெல்க! வெல்க! வெல்க!

பணிக! பணிக! பணிக!
பணிவாய் நின்றே பலவுஞ் செய்யத்
துணிக! துணிக! துணிக!

விருந்து! விருந்து! விருந்து!
விருந்துக் கிட்டு மிகுந்ததை என்றும்
அருந்து! அருந்து! அருந்து!

பொறுக்க! பொறுக்க! பொறுக்க!
பொறுத்துக் கொண்ட தீமையை உடனே
மறக்க! மறக்க! மறக்க!

எண்ணு! எண்ணு! எண்ணு!
எண்ணிய வற்றுள் ஏற்றதை உடனே
பண்ணு! பண்ணு! பண்ணு!

ஒழுகு! ஒழுகு! ஒழுகு!
ஒழுக்கம் ஒன்றே கற்றவ[illegible] ன்றும்
அழகு! அழகு! அழகு!

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.